# 7

# அவருடைய சரீரத்திற்குள் சமாதானம் ஏற்பட சாத்தியமாயிற்று

## (2:14–22)

*யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயான முழுமையான வித்தியாசங்களை சுட்டிக் காட்டிய பின், பவுல் இரண்டு கூட்டங்களுக்குமிடையே சமாதானமான உறவு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று அறிவித்தார். இது எப்படி சாத்தியமாகும்? பவுல் "அவரே நம்முடைய சமாதானக் காரணரானார்" என்று சொன்னார் (2:14). இங்கே, அவர் 2:18 வசனங்களினூடே செல்லும் ஒரு கருத்தை - சமாதானத்துக்கடுத்த ஒரு கருத்தை அறிமுகப்படுத்தினார். அப்போஸ்தலன் முதலாவதாக யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே சமாதானத்தை முன்வைத்தார் (2:14, 15); பிறகு மனுஷருக்கும் தேவனுக்குமிடையேயான சமாதானத்தைக் குறித்து விவாதித்தார் (2:16-18).*

## சகல ஜனத்தாருக்கும் ஒரே சரீரத்திற்குள் சமாதானம் *(2:14, 15)*

***14எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானகாரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து 15சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி**[னார்].*

**வசனம் 14.** ஏசாயா 9:6 ல் மேசியா வரவிருந்த "சமாதான பிரபு" என்று முன்னிறுத்தப்பட்டார். கிறிஸ்துவின் பிறப்பின் போது, தேவதூதர்கள் "மனுஷர்களுக்குள்ளே சமாதானம்" என்று பாடினார்கள் (லூக்கா 2:14). இருப்பினும், எபேசியர் 2 ல் பவுல் இயேசுவை **நமது சமாதானமாக** முன் நிறுத்துகிறார், ஏனெனில் மனுஷருக்குள்ளே சமாதானமும் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலான சமாதானமும் கிறிஸ்துவாகிய நபருக்குள் கட்டுமானம் பெற்றுள்ளது. இந்தப் பயன்பாட்டின் ஆற்றல் வலியுறுத்தலுக்குரியது; பின் வருமாறு அதை வாசிக்கலாம், "அவர் தாமே, அவர் தான், வேறொருவருமில்லை ..."[1] **அவர்** எனும் பதம் "அவரை மட்டும்" என்று பொருளுடையது மன்றி, "*அவர் தமது சுய நபர்த்தத்துவம் உடையவர்*" என்றும்

பொருள்படும்.[2] கூடுதலாக, "சமாதானம்" என்பது கிரேக்க வசனப்பகுதியில் அடுத்து வரும் துணைபெயர்ச் சொல்லைக் கொண்டுள்ளது, ஆதலால், இந்த கருத்து இப்படியாக வாசிக்கப்படவேண்டும், "அவர் தாமே, வேறுயாருமல்ல, நமக்கு சமாதானக் காரணர் ஆனார்," அவர் நம்முடைய சமாதானக்காரணர்; அவர் மூலமாய் நமக்கு சமாதானம் உண்டாயிருக்கிறது, அவராலேயன்றி சமாதானம் இல்லை.

வசனம் 14 ல் வருகிற "சமாதானம்," *eirēnē,* என்பது "ஒரு காலத்தில் பிரிந்திருந்தவைகள் ஒன்றாக்கப்பட்டு விட்டது"[3] என்பதோடு சேர்ந்து வருகிற சொல். அந்த வசனப்பகுதியில், "பிரிந்திருந்தவைகள்" என்பது யூதர்களையும் புறஜாதியாரையும் குறிக்கிறது என்று வசனப்பகுதி காட்டுகிறது. முதல் நூற்றாண்டில், யூதர்களும் புறஜாதிகளும், மனிதருடைய கோணத்தில், நம்பிக்கையற்ற நிலையில் பிரிந்திருந்தனர். யூதர்கள் புறஜாதி மக்களை அருவெறுக்கத்தக்கவர்களைப் போலவும், அசுத்தமான நாய்களைப் போலவும் பார்த்தனர் (மத்தேயு 15:27). அவர்கள் புறஜாதி மக்களின் வீடுகளில் நுழைய மாட்டார்கள் (காண்க நடபடிகள் 10:28). புறஜாதிகளும் அதற்கு மாறாக யூதர்களை பிரிவினை வாதிகளாகவும், முரட்டு சுபாவமும் அகந்தையும் உள்ளவர்களாகவும் இனவெறியர்களாகவும் பார்த்தனர்.

ஆகிலும், **இருதிறத்தாரையும்,** கிறிஸ்து **ஒரே கூட்ட மக்களாக்கினார்.** இது ஒரு புரட்சிகரமான சிந்தனை. "நமது சமாதான காரணராக" கிறிஸ்து தமது சிலுவையின் மூலம் இந்த ஒற்றுமையை சிருஷ்டித்தார். சிலுவையின் குறுக்கு விட்டமாகிய மரம் இரண்டு திசைகளை நோக்கி செய்யப்பட்டிருந்தது, கிறிஸ்துவின் கரங்கள் இரண்டு எதிரெதிர் திசைகளில் யூதர்களையும் புறஜாதி களையும் ஒன்றாக்கும்படி நீட்டி வைக்கப்பட்டிருந்தது.

இந்த இரு திறத்தாரையும் தமது சரீரத்திற்குள் கொண்டுவர, கிறிஸ்து **நடுவாக நின்ற பிரிவினையாகிய சுவரைத் தகர்த்தார்.** "பிரிவினையாக" (*phragmos*) யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இடையில் இருந்த சுவர் தேவனால் இஸ்ரவேலர்களுக்கு பிரதானமாய்க் கொடுக்கப்பட்டிருந்த மோசேயின் நியாயப்பிரமாணம் தான் (காண்க 2:15). நியாயப்பிரமாணம் யூதர்களை தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்களாக்கி மற்றவர்களிடமிருந்து அவர்களைப் பிரித்தது. நியாயப் பிரமாணத்தினால் கூடுதல் பிரிவினைச் சுவர்களும் கட்டப்பட்டன. உதாரணமாக, எருசலேமிலிருந்த தேவாலயம் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே பிரிவினையை உண்டுபண்ணுவதாயிருந்தது. தேவாலயத்துக்குப் புறம்பே வெளிப்பிரகாரம் இருந்தது, அது புறஜாதிகளின் பிரகாரம் என்றழைக்கப்பட்டது, அதற்குள் யார் வேண்டுமானாலும் போகலாம். புறஜாதிகளின் பிரகாரத்துக்குள் ஸ்திரீகளுக்கான பிரகாரம் அமைந்திருந்தது, அதற்குள் யூத ஸ்திரீகள் பிரவேசிப்பார்கள். ஸ்திரீகளின் பிரகாரத்தைத் தாண்டி உள்ளே, இஸ்ரவேலின் பிரகாரம் இருந்தது, அதற்குள் யூத புருஷர்கள் மட்டும் பிரவேசிப்பார்கள். அடுத்து தேவாலயம் அமைந்திருந்தது, அதற்குள் ஆசாரியர்கள் மட்டும் பிரவேசித்தார்கள்.[4] புறஜாதி களின் பிரகாரத்தையும் ஸ்திரீகளின் பிரகாரத்தையும் பிரித்துக்காட்டும் கல்சுவற்றின் மேல் அந்நியர் எவரும் பிரவேசிக்க தடைசெய்யப்பட்ட இடம் "மீறுவோர் மரணதண்டனைக்கு உட்படுவார்கள்" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.[5]

*தேவாலயம் அடையாளமாக தேவனுடைய பிரசன்னத்திலிருந்து புறஜாதிகளை துண்டித்துப் போட்டது. பவுல். எபேசுப்பட்டணத்து புறஜாதியைச் சேர்ந்த, துரோபீமு என்பவனை, தேவாலயத்தின் பிரிவினைச் சுவரைத் தாண்டி கூட்டிக் கொண்டு போனதற்காக தவறாகக் குற்றஞ் சுமத்தி அவரை கைது செய்து காவல் வைத்ததால், பவுலுக்கு அந்தப் பிரிவினை நன்கு அறியப்பட்டிருந்த ஒன்று (நடபடிகள் 21:28, 29).*

***வசனம் 15.*** *தேவன் யூதர்களையும் புறஜாதிகளையும்* ***சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, ஒன்றாக்கி சாதித்தார்.*** *வசனம் 13 கிறிஸ்துவின் இரத்தம் தூரத்திலிருந்தவர்களை சமீபமாக்கிற்று என்றும், வசனம் 14 கிறிஸ்துவே நமது சமாதானகாரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார், ஏனெனில் பிரிவினையாக இருந்த நடுச்சுவரை அவர் தகர்த்தார் என்றும் சொல்லுகிறது. அப்படிப்பட்ட வசனப் பகுதியிலிருந்து, "மாம்சத்தினாலே ஒழித்து" என்பதை நாம் சிலுவையைக் குறிப்பதாக எடுத்துக்கொள்கிறோம். அவர் சிலுவையிலே மரித்த பொழுது, நியாயப்பிரமாணத்தால் ஏற்படுத்தப்பட்ட யூதர்களுக்குள்ளும் புறஜாதிகளுக்குள்ளும் இருந்த பகைமையை அப்புறப்படுத்தினார். எப்படியெனில் பிரிவினைக்கு அடிப்படைக் காரணியாக இருந்ததை - நியாயப்பிரமாணத்தையே ஒரு முடிவுக்குக் கொண்டு வந்ததால் இது சாத்தியமாயிற்று. "ஒழித்து" (katargeō) என்பதன் பொருள் ஒன்றை "பயனற்றதாக்கு"[6] அல்லது "முடிவுக்குக் கொண்டுவா"[7] என்பதாகும்.*

*ஒருவர் தனது யூகத்தால் கிறிஸ்து சடங்காச்சாரப் பகுதி பிரமாணத்தையே முடிவுக்குக் கொண்டுவந்தார் அல்லது சட்ட ரீதியான கட்டுப்பாட்டுப் பிரமாணத்தின் பகுதியையே ஒழித்தார் என்று வாதிடுவது உண்மைக் கருத்தை அவர் தவற விட்டு விட்டார் என்று பொருள். பவுல் கூறும் போது, "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை கிறிஸ்து தமது மாம்சத்தினாலே ஒழித்தார்" என்று சொன்னார். "சட்டதிட்டங்கள்" (entolē) "கட்டளையிடும் ஒருவருடைய அதிகாரத்தைச் சுட்டிக்காட்டுகிறது" - இந்த வகையில், அது தேவனைக் குறிக்கிறது. "திட்டங்கள்" என்பவை "உபதேச வாக்கியங்கள்" (dogma) நியாயப்பிரமாணத்தில் இடம் பெற்றிருந்தவை. சட்டங்களாலும் உபதேசக் கோட்பாடுகளாலும் ஏற்படுத்தியிருந்த, முழுப்பிரமாணமும், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது முடிவுக்கு வந்தது. இது நடவாதிருந்திருக்குமானால், பிறகு யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே நிலவி வந்த பகைமை. "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம்" தொடர்ந்து இருந்திருக்கக் கூடும்.*

*இரு திறத்தாரையும் ஒருவரோடொருவரை ஒப்புரவாக்கி பிரிவினையாக நின்ற நடுச்சுவரை தமது மரணத்தால் கிறிஸ்து தகர்த்து,* ***"இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணினார்."*** *அவர் "இரு திறத்தாரையும் ஒரே புதிய மனுஷனாக தமக்குள் சிருஷ்டிப்பதற்கு" அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தினார். "சிருஷ்டித்தல்" என்பது இங்கே poieō, "உண்டாக்க" என்ற வார்த்தையைக் குறிப்பிடாமல், "சிருஷ்டிப்பதற்கு," ktizō, எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார், அதன் பொருள் "படைப்பதற்கு."[8] யூதர்களிடமிருந்த சிறப்பம்சங்களையும் புறஜாதிகளிடமிருந்த சிறப்பம்சங்களையும்*

ஒன்றிணைத்து எளிமையாக ஒற்றுமையை ஏற்படுத்த தம்மை கிறிஸ்து அர்ப்பணிக்கவில்லை. மாறாக, கிறிஸ்து யூதர்களையும் புறஜாதி களையும் ஏதோ முழுவதுமான புதிய ஒன்றை - "ஒரே புதிய மனுஷனாக" சிருஷ்டிக்க கிறிஸ்து முற்பட்டார். இந்த புதிய மனுக்குலம் "அவருக்குள்" சிருஷ்டிக்கப்பட்டது. 2 கொரிந்தியர் 5:17ல், பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்" என்று சொன்னார். ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய, சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார் (காண்க ரோமர் 6:3; 1 கொரிந்தியர் 12:13). கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர் ஒரு புது சிருஷ்டியாயிருந்தால், கிறிஸ்துவுக்குள் இருக்கும் அநேகரும் புதிய சிருஷ்டிகளே, "ஒரே புதிய மனுஷனாக," கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் ஜனங்கள், அவருடைய சபையில், இன்னமும் ஆணாகவும் பெண்ணாகவும், ஐசுவரியவான்களாகவும் ஏழைகளாகவும், முதலாளிகளும் வேலைக்காரர்களும் (6:5-9) யூதர்களும் புறஜாதிகளுமாயிருக்கின்றனர். எப்படியாயிருப்பினும், கிறிஸ்துவுக்குள் இருக்கிற யாவரும் - அவர்கள் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன் யாராயிருந்திருந்தாலும் அல்லது என்னவாக இருந்திருந்தாலும் - அவர்களுக்கு தேவனிடத்தில் ஒரேவித உரிமையும் புதிய சிருஷ்டிக்குரிய முக்கியத்துவமும், புதிய மனுக்குலமாக, கிறிஸ்துவின் சபையாகிய, சரீரமாயுமிருக்கிறார்கள். நமக்குள் இருந்த வித்தியாசங்கள் தேவனால் ஒழுங்காக்கப்பட்டுள்ளது, ஆனால் கிறிஸ்துவுக்குள் என்னவாக்கப்பட்டிருக்கிறோம் என்கிற மாபெரும் காரியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வித்தியாசங்களெல்லாம் மங்கலாகக் காணப்படுகின்றன. பவுல் கலாத்தியர்களிடத்தில் அறிவித்ததாவது,

> "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:26-28).

சபையிலே ஆற்ற வேண்டிய கடமையைக் குறித்து பவுல் இங்கே பேசவில்லை, மாறாக தேவனிடத்தில் இருக்கிற சம உரிமையைக் குறித்துப் பேசுகிறார். அவர் வாழ்வின் நிலைகளை படம்பிடித்துக்காட்டவில்லை, மாறாக தேவனோடுள்ள உறவு முறையைக் காட்டுகிறார். ஒருவருடைய தனிப்பட்ட அடையாளத்தைக் குறித்த கேள்வியல்ல, மாறாக ஒருவர் கிறிஸ்துவுக்குள் யாராக மாறுகிறார் என்பது தான் காரியம் - புதிய சிருஷ்டியின் அங்கமாகிறாரா என்பது தான்.

சகல ஜனங்களையும் ஒன்றிணைக்கும் கடமையை கிறிஸ்து மிகப்பெரிய இலக்காக சிலுவையிலே சாதித்தார். ஆகிலும், மனிதனுக்கு மனிதன் ஒன்றிணைக்கப்பட்டது கிறிஸ்துவின் மிகப் பெரிய சாதனையல்ல. அதைக் காட்டிலும் மிகப் பெரிய சாதனை சகலமும் தேவனோடு ஒன்றிணைக்கப்பட்ட வாய்ப்பாகும். இதுதான் தேவனுடைய நிறைவான இலக்காக இருந்து தாம்

*வெளியரங்கமாக்கக் கொண்டிருந்த நோக்கமாகும் (காண்க 1:9, 10).*

## *ஒரே சரீரத்திற்குள் தேவனோடு சமாதானம் (2:16-22)*

***[16]பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். [17]அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். [18]அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். [19]ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, [20]அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; [21]அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்தஆலயமாய் எழும்புகிறது; [22]அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.***

***வசனம் 16.*** *சிலுவை மூலமாக இயேசு பாவிகளை தேவனுக்கு ஒப்புரவாக்குதலை சாத்தியமாக்கினார். இயேசு நமது பாவங்களை தம்மேல் சுமந்தார் அதினாலே அவரது நீதியை நம்மேல் ஏற்றுக்கொள்ள ஏதுவாக்கினார்.*

***ஒரே சரீரத்திற்குள்ளாக தேவனுக்குள்*** *ஒப்புரவாகுதல் இடம் பெறுகிறது. எபேசியரில் சொல்லப்படும் கிறிஸ்துவின் சரீரம் அவருடைய சபை (காண்க 1:22, 23), "புதிய மனிதன்" (காண்க 2:15), ஆகையால், தேவனோடு ஒப்புரவாகியிருக்கிற ஒவ்வொரு நபரும் சபையில் ஒரு அங்கமாவார். தேவனிடத்தில் ஒப்புரவாகுதல் என்பது சபைக்குள் இருப்பது. நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட போது, அவருடைய சரீரமாகிய சபைக்குள், ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் (1 கொரிந்தியர் 12:13). எனவே, கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது, சபைக்குள் இருப்பது. ஒருவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதற்கு முன், அவர் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிறார், சபைக்குப் புறம்பே இருக்கிறார், தேவனிடத்தில் ஒப்புரவாகுதலுக்குப் புறம்பேயிருக்கிறார்.*

*அப்படிப்பட்ட நிலைமை தேவனுடைய கிருபையையோ அல்லது கிறிஸ்துவின் சிலுவையையோ மதிப்பைக் குறைக்காது. அதே போல சபையின் மேலோ அல்லது மனிதனுடைய பகுதியில் இரட்சிப்பின் மீதோ அதிக வலியுறுத்தலைக் கொண்டிராது. தேவனுடைய கிருபையும் கிறிஸ்துவின் சிலுவையும் மனிதனுடைய ஏற்றுக் கொள்ளுதலினால் மட்டுமே பெற்று சரிவர செயல்பட முடியும். தேவன் இரட்சிப்பை நம்மீது திணிப்பதில்லை. சபையல்ல, கிறிஸ்துவே இரட்சகர், ஆனால் சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்கள். மனிதன் தனக்குத்தானே தன்னை இரட்சித்துக்கொள்ள இயலாது, ஆனால் அவன் கிறிஸ்துவில் இருக்கிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளக் கூடும். அவன், தன்னுடைய ஏற்றுக் கொள்ளுதலால், தேவன் தன்னை இரட்சிக்க அனுமதிக்க*

*முடியும், சபையில் சேர்த்துக் கொள்ளவும், அவருக்குள் தன்னை "ஒரே சரீரத்தில்" ஒப்புரவாக்கிக் கொள்ளவும் முடியும்.*

***சிலுவையினாலே*** *தேவன்* ***பகையைக் கொன்று*** *மனுஷனுக்கும் மனுஷனுக்கும் தேவனிடத்திலிருந்து அந்நியமாக்கப்பட்டிருந்த மனுஷனுக்கும் தேவனுக்குமிடையே இருந்த பகைமைக்கு முடிவைக் கொண்டு வந்தார். வசனம் 15 ல் சொல்லப்பட்டுள்ள "பகைமை" எனும் வார்த்தை யூதர்களையும் புறஜாதிகளையும் பிரித்து வைத்த நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது, சில விளக்கவுரை யாளர்கள் வசனம் 16ல் குறிப்பிடப்படுகிற "பகை" விதிவிலக்காக மனுஷனிடத்திலிருந்து அந்நியமாக்கப்பட்ட மனுஷனைக் குறிக்கிறது என்கின்றனர். எப்படியிருப்பினும், வசனங்கள் 13-16ல், கிறிஸ்துவின் இரத்தம் தேவனிடத்திலிருந்து தூரமாயிருந்தவர்களுக்கும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டிருந்தவர்களுக்குமிடையே ஒப்புரவாகுதலைக் கொண்டு வந்தது என்று நாம் அறிகிறோம். "பகை" என்பது* எல்லாவகை *விரோதங்களையும் குறிக்கும், அவைகளை கிறிஸ்து தாம் மரித்தபோது கொன்று போட்டார்.*

***வசனம் 17.*** *பகைமையை முடிவுக்குத் கொண்டு வந்ததால் கிறிஸ்து சமாதானத்தை சாத்தியமாக்கினார். இந்த வசனம் (NASB மொழிபெயர்ப்பில் பெரிய எழுத்துக்களில் காணப்படுகிறது அதினால் அது பழைய ஏற்பாட்டு மேற்கோள் என்று காணுகிறது) அது ஏசாயா 57:19ன் ஒரு உறுதியற்ற மொழிபெயர்ப்பாகும்: "தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம்." ஏசாயா கூறும் இந்த வசனப்பகுதியின் முன்னும் பின்னும் வருகிற கருத்தும்படி* ***தூரமாயிருக் கிறவர்களும் சமீபமாயிருக்கிறவர்களும்*** *அந்நிய நாட்டிலே சிறையிருப்புக்குச் செல்லும் யூதர்களும் தேசத்திலேயே தங்கியிருந்த மீதியானவர்களும் என்று குறிப்பிடுகிறார் என்று நாம் அறிகிறோம். இருசாராருக்கும் தேவன்* ***சமாதானத்தின்*** *செய்தியைக் கொண்டுவருவார். எபேசியரில், பவுல் ஏசாயாவின் வசனக் குறிப்பை யூதருக்கும் புறஜாதிக்கும் பயன்படுத்துகிறார். கிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம், இருசாராருக்குமான சமாதானத்தின் சாத்தியக்கூறுகளை அறிவித்தார் - ஒருவருக்கொருவர் சமாதானம் மற்றும் தேவனோடும் சமாதானம். இங்கே கூறப்படுகிற சமாதானம் தேவனோடு ஒப்புரவாகுதலை மட்டுமே குறிப்பதாக இருக்கக் கூடும், ஏனெனில் இருசாராரும் இந்த சமாதானத்தைப் பற்றி அறிவிக்கப்பட்டிருந்தனர்.*

***அவர் வந்து சமாதானத்தைப் பிரசங்கித்தார்*** *என்பது இயேசுவின் தனிநபர் ஊழியக்காலத்தில் போதித்தவைகளைக் குறிப்பதில்லை, அல்லது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் அப்போஸ்தலர்கள் மூலம் இயேசுவின் பிரசங்கம் செய்யப்பட்டதையோ அல்லது கிறிஸ்துவின் முழு ஊழியத்தையுமோ அது குறிப்பதில்லை, மாறாக, 2:14-18ல் ஆய்வு செய்து கொண்டுள்ள வசனப்பகுதி கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் மரணத்தை அது சுட்டிக் காட்டுகிறது.*

***வசனம் 18.*** *இந்த வார்த்தைகள் அப்போஸ்தலன் கொண்டு செல்லுகிற கருத்துக்கு முடிவுரையாக அமைந்துள்ளது. கிறிஸ்துவின் ஊழியத்தின்* ***மூலம்,*** *யூதர்களும் புறஜாதிகளும் இப்பொழுது தேவனிடத்தில் சேருகிற சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர்! சேருகின்ற* ***சிலாக்கியம்*** *என்பது prosagōgē, எனும் கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பு, இதன் பொருள் "கொண்டு*

*வருகிற செயல், நகர்த்துதல்"*[9]; **ஆகிலும் நாம் … இருக்கிறோம்** எனும் வினைச் சொல்லை நாம் கவனிக்க வேண்டும் அது செயல் பொருள் குன்றிய அர்த்தத்தில் மற்றும் "நாம் கொண்டுவரப்பட்டோம்" என்பதற்குப் பதில், "நாம் வரக்கூடும்" என்ற கருத்தைக் கொடுக்கிறது.[10] எபேசியர் 3:12 லும் ரோமர் 5:1, 2 லும், பவுல் இதே கருத்தை முன் வைத்தார். "சேரும் சிலாக்கியம்" என்பது "இராஜாவுக்கு முன்பாக நிற்கும் உரிமை" என்பதையும் குறிக்கும்,[11] மற்றும் இந்த நிகழ்வில் அது தேவனைக் குறிக்கும். எல்லா ஜனங்களும் கிறிஸ்து மூலமாக மட்டுமே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர் (யோவான் 14:6).

**வசனம் 19.** இந்த நிருபத்தைப் பெற்றவர்கள் தேவனிடத்தில் சேரும் வழியைத் தெரிவு செய்திருந்தபடியால், பவுல், "இனி நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து" என்று எழுத முடிந்தது. 2:19-22ல், பவுல் 2:14-18 ஐ சாராம்ஸமாக்கிக் குறிப்பிட்டார், ஒரு முடிவுரையையும் தந்தார். புறஜாதிகள் **அந்நியர்கள்** என்றும் (காண்க 2:12) **பரதேசிகள்** என்றும் கருதப்பட்டனர், அதினால் அக்காலத்திலே அவர்களுக்கென ஒரு ஸ்தானம் இல்லாமலும், உடன்படிக்கையில்லாதவர்களும், எந்த சிலாக்கியமுமில்லாமலும், நம்பிக்கையற்றவர்களும், தேவனற்றவர்களும், தேசமற்றவர்களாயுமிருந்தனர். கிரேக்கப் பெயர்ச்சொல் *paroikos,* என்பது "அந்நியர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது ஒரு தொகுப்பு வார்த்தை, *para* ("வழியருகே") மற்றும் *oikeō* ("ஒருவரது வீட்டை ஏற்படுத்துதல்"). "இப்படியாக ஒருவர் மற்ற ஒருவருடைய வீட்டின் அருகே தனது வீட்டைக் கொண்டிருத்தலைக் குறிக்கிறது. இது இங்கே இன்னொரு தேசத்திலிருந்து வந்தவர் ஆனால் … தனக்கென குடியுரிமை பெறாதவர்"[12] என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு யூதர்கள் விசேஷித்த சிலாக்கியங்களைப் பெற்றிருந்த போதிலும், அவர்களும், கூட, சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்களுக்கு அந்நியரும் தேவனற்றவர்களுமாயிருந்தனர், ஏனெனில் அவர்களும் பாவிகளாகக் கருதப்பட்டனர்.

கிறிஸ்துவுக்குள்ளான யூதர்களும் புறஜாதிகளும் **உடன் குடிமக்களும்** (*sumpolitēs*) தேவனுடைய நகரத்தார்களுமாயிருக்கின்றனர். எபேசு கிறிஸ்தவர்கள், விசேஷமாக புறஜாதி கிறிஸ்தவர்கள் **இனியும்** தங்களுக்கு வீடற்றவர்களாக இருக்க வில்லை; குடியுரிமை இல்லாதவர்களாகவும் கூட இருக்கவில்லை, ஏனெனில் அவர்கள் தேவனுடைய காணியாட்சியில் பங்கு பெற்றவர்களாயிருந்தனர். இதே கருத்தை, வேறு இடங்களில் பவுல் வலியுறுத்தியிருக்கிறார். பிலிப்பியர்களுக்கு அவர், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று சொன்னார் (பிலிப்பியர் 3:20), மேலும் கொரிந்தியர்களுக்கு உறுதிப்படுத்தி, "நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருக்கிறோம்" என்றார் (2 கொரிந்தியர் 5:20). ஒரு ஸ்தானாபதி தான் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு நாட்டில் ஆனாலும் அவருடைய குடியுரிமை இருப்பது வேறொரு நாடு. அவர் அந்நிய தேசத்தில் தனது குடியிருப்பு இருப்பதை முன் வைத்து அதிகாரத்துடன் பேசுகிறார். கிறிஸ்தவர்களாக, நாம் இந்த உலகத்தில் வாழ்கிறோம், ஆனால் இன்னொரு நாட்டின் குடிமக்கள் நாம்; நாம் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே பரலோகத்தை

*முன் வைத்து பேசுகிறோம். அனைத்துக் கிறிஸ்தவர்களும் "உடன் குடிமக்களாயிருக்கிறோம்."*

***பரிசுத்தவான்களோடே கூட*** *எபேசியர்கள் "உடன் குடிமக்களா யிருக்கிறார்கள்" என்று பவுல் சொன்னதன் பொருள் என்ன? "பரிசுத்தவான்கள்" என்பதில் யாரெல்லாம் உட்படுத்தப்பட்டனர்?* (NIV *மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் "தேவனுடைய ஜனங்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது) "பரிசுத்தவான்கள்" என்பது* (*hagioi*) *கிரேக்கப் பெயர்ச்சொல்லின் மொழி பெயர்ப்பு, இதன் பொருள் எளிமையான வார்த்தையில் "பரிசுத்த முள்ளவர்கள்" (யூதா 14 ல் பயன்படுத்தப்பட்டுள்ளது போல). "பரிசுத்தமுள்ளவர்கள்" என்பது யார்?*

*அவர்கள் யூதக்கிறிஸ்தவர்களா? சிலர் அப்படித் தான் நினைத்து யூதக் கிறிஸ்தவர்களை பவுல் "பரிசுத்தவான்கள்" என்று குறிப்பிட்ட வசனப்பகுதி களை சுட்டிக் காட்டுகின்றனர். ஆகிலும், கிறிஸ்துவுக்குள் வித்தியாசங்கள் யாவும் தகர்க்கப்பட்டிருந்தன; பவுல் 2:13-16ல் வரிசைப்படுத்தியிருக்கும் கிறிஸ்துக்குள்ளான ஆசீர்வாதங்கள் யூதர்களைப் போலவே புறஜாதிகளுக்கும் அவசியமாயிருந்தன.*

*அவர்கள் தேவதூதர்களா? மற்றவர்கள் இதே வித நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு யோபு 15:15; சங்கீதம் 89:5 போன்ற பழைய ஏற்பாட்டு வசனங்களையும் 1 தெசலோனிக்கேயர் 3:13 மற்றும் 2 தெசலோனிக்கேயர் 1:7, 10 ஆகிய புதிய ஏற்பாட்டு வசனங்களையும் மேற்கோள் காட்டி தூதர்கள் "பரிசுத்தவான்கள்" என்றும் "பரிசுத்தமுள்ளவர்கள்"* (*hagioi*), *என்றும் சொல்லப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இந்த விளக்கவுரையாளர்கள் கொலோசெயர் 1:12 ஐக் குறிப்பிட்டு, குறிப்பிடப்பட்ட "பரிசுத்தவான்கள்" என்பது* (*hagioi*), *தேவதூதர்களாக இருக்கக் கூடும் என்கின்றனர். மேலும் சிலர் தங்களின் ஆய்வின்படி கிறிஸ்தவர்களின் "குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது" என்றும் (பிலிப்பியர் 3:20), அவன் "மேலான எருசலேமுக்கு" உரியவன் என்றும் (கலாத்தியர் 4:26), ஆனால் "சீயோன்மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரத்திற்கும், பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரங்களான தேவ தூதர்களிடத்திற்கும்" (எபிரெயர் 12:22) வந்து சேர்ந்தவர்கள் என்கின்றனர்.*

*எப்படியாயினும், நாம் இங்கே கேட்கக்கூடிய கேள்வி "எபேசியரில் பிற வசனங்களில்* (*hagioi*), *என்ற வார்த்தையை பயன்படுத்தின போது பவுல் யாருக்குக் குறிப்பிடுகிறார்?" பவுல் நிருபத்தை, "எபேசுவிலே இருக்கிற பரிசுத்தவான்களுக்கு" [hagioi], என்று முகவரிப்படுத்துகிறார் (காண்க 1:1). இந்த வார்த்தையின் பொருளை பல பதங்களில் மேலும் பதினான்கு இடங்களில் எபேசியரில் அவர் பயன்படுத்தியிருக்கிறார்: இரண்டு முறை பரிசுத்த ஆவிக்கு பயன்படுத்தப்படுகிறது (1:13; 4:30); இரண்டு முறை சபைக்கு பயன்படுத்தப்படுகிறது (2:21; 5:27); ஒருமுறை அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் குறிப்பிடுகிறது (3:5); ஒரு முறை கிறிஸ்தவன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு விளக்கம் அளிக்கப்படுகிறது (1:4); மற்றும் 2:19 யும் சேர்த்து, எட்டு முறை, "பரிசுத்தவான்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1:15, 18; 3:8, 18; 4:12; 5:3; 6:18).* Hagios *எனும் பதமும்* hagioi *என்று எபேசியரில் பயன்படுத்தப்பட்டுள்ள பதமும்,*

*யூதக்கிறிஸ்தவர்களுக்கோ அல்லது தேவதூதர்களுக்கோ "பரிசுத்தவான்கள்," என்று குறிப்பிடப்படவில்லை, ஆனால் அனைத்துக்கிறிஸ்தவர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது, அது யூதராயிருந்தாலும் சரி புறஜாதிகளாயிருந்தாலும் சரி.*

*"**தேவனுடைய வீட்டார்**" எனும் சொற்றொடர் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திற்கு உரியவர்கள் எனும் பொருளில் பேசுகிறது. கிரேக்கப் பெயர்ச் சொல்லாகிய oikeios என்பது பவுலால் மற்ற இடங்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தை (கலாத்தியர் 6:10; 1 தீமோத்தேயு 5:8) இதன் பொருள் "ஒரு வீட்டிற்கோ குடும்பத்திற்கோ உரியவர்கள் ... நெருங்கினவர்கள் ... உறவினர்கள்."[13] "உடன் குடிமக்கள்" என்பதைக் காட்டிலும் இது இன்னும் அதிகமான நெருக்கத்தைக் குறிக்கும் வார்த்தை, கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கம் என்கிற உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது, தேவனோடு நெருங்கின உறவுக்காரனாயிருப்பது, தேவனோடு கூட தகப்பன்/பிள்ளை என்கிற உறவுமுறையைக் கொண்டிருப்பது.*

***வசனம் 20. அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு வருகிறீர்கள்*** *என்பது சபை ஆவிக்குரிய கட்டிடம் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது, அதினுடைய அஸ்திபாரம் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும். இந்த உருவகம் புதிராகக் காணுகிறது ஏனெனில் சபை பேதுரு செய்த அறிக்கையின் சத்தியமாகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதன் மேல் கட்டப்பட்டது என்று நமக்குத் தெரியும் (காண்க மத்தேயு 16:16-18). இன்னொரு இடத்தில், பவுல் சொன்னார், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவேயல்லாமல், வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொரிந்தியர் 3:11). பிறகு எப்படி, சபை "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களாகிய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டது" என்கிறார்?*

*முதலாவதாக, "அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள்" என்பவர்கள் யார்? தமது சீஷர்களிடமிருந்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் (apostoloi) கிறிஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தனக்குரிய இடத்துக்குப் போகும்படி தெரிந்து கொண்ட யூதாஸின் இடத்தை நிரப்ப மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டார் (நடபடிகள் 1:15-26). கடைசியாக, பவுல் "தேவனுடைய சித்தத்தினால்" தெரிந்து கொள்ளப்பட்டார் (எபேசியர் 1:1) "அகலாப் பிறவி போன்ற" இவர் அப்போஸ்தலர்களில் கடைசியானவர் (1 கொரிந்தியர் 15:8). பவுல் சபையைத் துன்பப்படுத்தினபடியால் "அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனென்றார்" (1 கொரிந்தியர் 15:9), ஆனால் வேறு எந்த அப்போஸ்தலனைக் காட்டிலும் "குறைவுள்ளவனல்ல" (2 கொரிந்தியர் 11:5; காண்க 12:11) என்றார். மற்ற அப்போஸ்தலர்களை போலவே, அவரும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்ணாரக் கண்ட சாட்சியாவார் (காண்க நடபடிகள் 1:22) மேலும் அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்களை அவர் நடப்பித்தார் (2 கொரிந்தியர் 12:12).*

*"அப்போஸ்தலர்கள்" என்றால் உண்மையில் "அனுப்பப்பட்டவர்கள்" என்று பொருள்.[14] இப்பொருளில் இது பன்னிருவர், மத்தியா, பவுல் ஆகியோருக்கு அப்பால் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு, அப்போஸ்தலன் என்று*

*அழைக்கப்பட்டார்; பர்னபா அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டார்; கள்ள போதகர்களும் அப்போஸ்தலர்கள் எனப்பட்டனர்; சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக் கொண்டனர் ஆகிலும் அப்போஸ்தலர்களல்ல; கிறிஸ்துவும் ஒரு அப்போஸ்தலர் எனப்பட்டார்.*[15] *இவர்களெல்லாரும் அப்போஸ்தலர்களெனப்பட்டாலும் - பன்னிரெண்டு பேர், மத்தியா, பவுல் ஆகியோரைப் போன்ற அப்போஸ்தலர்கள் எனும் பொருள் படாது, மாறாக அவர்கள் "அனுப்பப்பட்டவர்கள்" எனும் பொருளில் அழைக்கப்பட்டனர் அல்லது ஒரு விசேஷித்த ஊழியத்தினிமித்தம் யாரோ ஒருவரால் அனுப்பப்பட்டவர் என்று பொருள்.*

*"தீர்க்கதரிசிகள்" யார்? இந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்க வேண்டுமானால், தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்களுக்குப் பின்பு குறிப்பிடப்படுகின்றனர் என்பதை நாம் ஆராய வேண்டும், 3:5ல் பவுல் தீர்க்கதரிசிகள் பற்றி பேசும் போது சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றார், மேலும் தீர்க்கதரிசனம் சபைக்குக் கொடுக்கப்பட்ட வரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (4:11). ஆகையால், இவை கிறிஸ்தவ யுகத்தின் தீர்க்கதரிசிகளேயல்லாமல் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை குறிப்பதில்லை, அவர்கள் சுவிசேஷத்தை வரவிருந்த ஒன்றாக மட்டுமே பார்த்தார்கள். புதிய ஏற்பாட்டில், தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசன வரமும் சபை ஜீவியத்தில் ஒரு அங்கமாயிருந்தது (காண்க நடபடிகள் 11:27; 13:1; ரோமர் 12:6; 1 கொரிந்தியர் 12-14; 1 தெசலோனிக்கேயர் 5:20).*

*அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்ன பொருளில் சபைக்கு "அஸ்திபாரமாயிருந்தார்கள்"? 1 கொரிந்தியர் 3:9-15 ல் தேவனுடைய மாளிகைக்கு கிறிஸ்து அஸ்திபாரமாகவும் தானும் மற்றவர்களும் புத்தியுள்ள சிற்பாசாரியர்களைப் போல அஸ்திபாரம் போடுபவர்களாய் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதால் செயல்பட்டனர் என்று கூறினார். ஜனங்கள் கிறிஸ்துவிடம் மனமாற்றம் அடைவதன் மூலம் கட்டுமானப் பணி நிறைவேறிக் கொண்டுள்ளது. எப்படியிருப்பினும், எபேசியர் 2 ல் பவுல் அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் வித்தியாசமான முறையில் தெளிவுபடுத்தியிருக்கிறார் - அஸ்திபாரம் போட்டவர்களாகவோ அதன் மீது கட்டியவர்களைப் போலவோ குறிப்பிடாமல், தாங்களே அஸ்திபாரங்களாக இருப்பது போல குறிப்பிட்டுள்ளார். "அஸ்திபாரத்தின் மேல்" என்பது அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் போட்ட அஸ்திபாரத்தின் மேல் என்று குறிப்பிடுவது. இது அப்போஸ்தலர்கள் எவைகளைப் பிரசங்கித்தார்களோ, அவைகளை, அதாவது கிறிஸ்துவை முன் வைப்பதாகும். இவ்விதக் கண்ணோட்டம் மத்தேயு 16:16-18 மற்றும் 1 கொரிந்தியர் 3:11 ஆகியவைகளுடன் ஒத்துப் போகக் கூடிய கருத்தாய், அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் ஒப்பிட்டு அவர்கள் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், உயிர்த்தெழுந்த தேவனுடைய குமாரனாயிருக்கிறார், சபை கட்டப்பட்ட கன்மலையாயுமிருக்கிறார் என்று பிரசங்கித்த பொருளிலேயே அஸ்திபாரமிட்டதாகக் குறிப்பிட்டார்.*

***வசனம் 20. மூலைக்கல்*** *என்பது எதைக் குறிக்கிறது என்பதில் விளக்கவுரையாளர்களுக்குள் உடன்பாடு இல்லை. அது akrogōniaios என்பதன் மொழிபெயர்ப்பு. வழக்கமாக ஒரு கட்டுமானத்தின் "கடைசி மூலையில் வைக்கப்படுதல்; அஸ்திவாரத்தின் மூலைக்கல் (அதன் ஆதாரமும்,*

கனத்திற்குரிய ஸ்தானத்தையும் கொண்டிருப்பதால் அது முக்கியத்துவம் உள்ளது)"[16] எனப்பொருள்படும். இதை சிலர், "ஒரு கட்டிடத்தின் உப்பரிகைக்கு மேல் வைக்கப்படுகிற" "மேல் மூடுகல்லை குறிப்பதாக எடுத்துக் கொள்கின்றனர்."[17] இதைக் குறித்துப் பேசுகிற வசனப்பகுதிகளை ஆய்வு செய்தும், "மூலைக்கல்" எனும் பதத்தின் பலதரப்பட்ட பயன்பாடும் வசனத்தில் குறிக்கப்பட்டுள்ளபடி எது சிறப்பான ஸ்தானத்தைக் காட்டுகிறது என்று தீர்மானிக்கலாம்.

சங்கீதக்காரன், "வீடு கட்டினவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" என்று சொன்னார் (சங்கீதம் 118:22). ஏசாயா 28:16 ல், தேவன் சொன்னார், "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது *பரீட்சிக்கப்பட்டதும்,* விலையேறப்பெற்றதும், *திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்,* விசுவாசிக்கிறவன் பதறான்" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). மேற்குறித்த இரண்டு வசனப்பகுதிகளுமே இயல்பில் மேசியாத்துவத்துவமுள்ளதும் புதிய ஏற்பாட்டில் இப்படியாக மேற்கோள் காட்டி பேசப்பட்டதுமாகும்: சங்கீத நடையில் தாம் தமது சொந்த ஜனங்களால் புறந்தள்ளப்படுதலைக்குறித்து இயேசு பயன்படுத்திப் பேசினார் ஆகிலும் "மூலைக்குத் தலைக்கல்லாக" குறிப்பிட்டுச் சொல்லவில்லை (காண்க மத்தேயு 21:42; மாற்கு 12:10, 11; லூக்கா 20:17). நடபடிகள் 4:11ல் கிறிஸ்து புறக்கணிக்கப்படுவதற்கு பேதுரு பயன்படுத்தி மேற்கோள் காட்டினார். பவுலும் பழைய ஏற்பாட்டின் இரண்டு பகுதிகளையும் ரோமர் 9:33 மற்றும் 10:11 ல் மேற்கோள் காட்டி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கும் புறக்கணிப்பதற்கும் விளக்கமளித்து எழுதினார், ஆகிலும் "மூலைக்கல்லைக் குறித்த" விளக்கம் எதையும் குறிப்பிடவில்லை.

"மூலைக் கல்லை" அடையாளப்படுத்த மிகவும் பயனுள்ள வசனப் பகுதி ஏசாயா 28:16 ஆக இருக்கலாம், அதில், "திட அஸ்திபாரமுள்ள, மூலைக்கல்" என்றுள்ளது. NASB என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில் பக்க ஓரத்தில் ஒரு குறிப்பாக சில அச்சடிக்கப்பட்ட நகல்களில் "நன்கு அஸ்திபாரமிடப்பட்ட கல்" என்று சேர்க்கப்பட்டது. ஏசாயா வசனப் பகுதியின்படியும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட விளக்கத்தின்படியும், "மூலைக்கல்லை" என்பது "மூலைசாய்வுக்கல்" என்ற ரீதியில் நினைப்பது சாலச் சிறந்தது, அது சுவற்றின் மூலையில் வைக்கப்பட்டு "அனைத்து அடுக்கு வரிசை கற்களையும் அனைத்து மூலைகளையும் மூலைச் சாய்வுக்கல் கட்டுப்படுத்திக் கொள்ளும்."[18] இது தேவனுடைய மாளிகையில் **கிறிஸ்துவை** அஸ்திபார கல்லாக அமைக்கும். அவரே அப்போஸ்தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் பிரசங்கிக்கப்பட்டார் மற்றும் அவர் முழு மாளிகையின் அடுக்கு வரிசை கற்களையும் மூலைகற்களையும் நிச்சயிக்கிற மூலைக்கல்லாய் இருக்கிறார். சபை கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின் மேலேயே கட்டப்பட்டது, அவரே சபையின் சகல விசுவாசத்துக்கும், போதனைக்கும், செயல்பாட்டிற்கும் உரிய சட்டம் இயற்றுபவராயிருக்கிறார். கிறிஸ்துவும் (அஸ்திபாரம்) அவருடைய வசனமும் (அதிகாரம்) இல்லாமல், சபை நிலைத்திருக்கவோ செயல்படவோ இயலாது.

**வசனங்கள் 21, 22.** பவுலின் கட்டிடத்தைக் குறித்த உருவக மொழி சாராம்ஸமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. **அவர் மேல்** என்பது "கிறிஸ்து

இயேசுவைக் குறிக்கிறது," **"மாளிகை முழுவதும்"** என்பது "தேவனுடைய வீட்டாரையும்," அதன் "அஸ்திபாரத்தையும்" "மூலைக்கல்லையும்" குறிக்கிறது. அவர்மேல் என்று மறுபடியும் பவுல் குறிப்பிட்டுக் காட்டுவதெல்லாம் சபையின் ஊழியமும், சபையின் வளர்ச்சியும், சபையின் பக்திவிருத்தியும், சபையின் நிலைத்தன்மையும் கூட கிறிஸ்துவுடனான உறவுமுறையின் மேல் சார்ந்துள்ளது என்பதைத்தான். இந்த வாக்கியங்களின் அமைப்பின் துவக்கத்தில் பவுல் இந்த உண்மையை வலியுறுத்தினார், அதே போல வாக்கியங்களின் அமைப்பின் கடைசியில் "கர்த்தருக்குள்" என்று முடிக்கிறார்.

**"இசைவாய் இணைக்கப்பட்டு"** என்பது எச்சவினையான sunarmologeō, என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. அது இங்கும் புதிய ஏற்பாட்டில் 4:16 ல் மட்டுமே, காணுகிறது. இரண்டு வசனப் பகுதி உருவகங்களிலும் சபை அங்கத்தினர்கள் முழு கிறிஸ்துவையும் அமைத்துக் காட்டும் அங்கங்களாயிருக்கிறார்கள், அவர்கள் மாளிகை (வீடு) என்றும் சரீரம் என்றும் காட்டப்படுகிறார்கள். 4:16ல், சபையை சரீரமாக தலைப்பிட்டு பவுல் பேசுகிறார். அதில் ஒவ்வொரு அங்கமும் ஒன்றோடொன்று கிறிஸ்து செய்யும் ஊழியத்தில் சார்ந்திருக்கின்றன. ஒவ்வொரு அங்கமும் முறையாக செயல்படும்போது சரீரத்தின் வளர்ச்சியும் கட்டமைப்பும் சாத்தியமாகிறது. நிகழ்கால பெயரெச்ச வினையாக இந்த இசைவாய் இணைக்கப்பட்டு வருகிறது என்ற நிகழ்கால தொடர் வாக்கியமாகப் பேசுகிறது.[19] முன்சேர்க்கையாக sun எனும் வார்த்தை ஆவிக்குரிய ஐக்கியத்தை குறிக்கிறது.[20] பொருள் என்னவெனில் சபை தேவனுடைய கட்டிடமாக தற்போதும் நிலைத்துள்ள மெய்ப்பொருளாய், யூதர்களையும் புறஜாதிகளையும் ஒன்றுபடுத்தி இசைவாய் இணைக்கப்பட்ட ஒன்றுமையுடன் ஒரே ஸ்தாபனமாக தொடர்ந்து செயல்படும் அமைப்பைக் கொண்டுள்ளது. "கூட்டிக் கட்டப்பட்டு" என்பது எபேசியர்கள் ஏற்கனவே தேவனால் அஸ்திபாரத்தின் மேல் வைக்கப்பட்டு சுவிசேஷத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்தபோது சபையில் சேர்க்கப்பட்டவர்களாய் இடம் பெற்றார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறது (காண்க நடபடிகள் 2:38-47).[21]

சபை இப்பொழுது நிலைத்திருக்கிறது மேலும் தொடர்ந்து ஜனங்கள் "ஜீவனுள்ள கற்களைப் போல" ஆவிக்குரிய அந்த வீட்டில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் (காண்க 1 பேதுரு 2:5). இந்த வகையில் அது கிறிஸ்துவுக்குள் **பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.** சபை "ஜீவனுள்ள கற்களைக் கொண்டு" வளருவது மாத்திரமல்ல, மாறாக ஆவிக்குரிய ரீதியில் அதின் அங்கத்தினர்கள் - "இந்த ஜீவனுள்ள கற்கள்" - அபிவிருத்தியடைந்து வாழ்க்கையில் பரிசுத்தத்தை அனுபவிக்கிறார்கள். இப்படிப்பட்ட இரட்டிப்பு வளர்ச்சியில், சபை "பரிசுத்த ஆலயமாக" மாறுகிறது.

இந்த வளர்ந்து வரும் ஆலயத்தில்தான் தேவன் **ஆவியில்** வாசம் பண்ணுகிறார். பவுல் வசனம் 22 க்கு ஒரு ஏவப்பட்ட வியாக்கியானத்தை 1 கொரிந்தியர் 3:16 ல் கொடுக்கிறார். அப்பொழுது அவர், "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என்று கேட்டார். தொடர்ந்து அவர், "தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 3:17). சபை என்பது தேவனுடைய கட்டிடம், தேவனுடைய ஆலயம், தேவன் தங்கி தாபரிக்கும்

*இடம். பரிசுத்தமாய் ஜீவிப்போருக்கு என்ன ஒரு ஊக்கத்தொகை இது!*

*எபேசியரின் இந்த வசனப்பகுதியில், பவுல் யூதர்களும் புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டதைக் காட்டுகிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் ஒப்புரவானதுடன் தேவனோடும் ஒப்புரவானார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள், அவர் வாசம் பண்ணுகிற இடமாகிய - எப்பொழுதும் வளருகிற தேவனுடைய ஆலயத்தில், தேவனுடைய பரிசுத்தவான்களாக, தேவனுடைய குடும்ப அங்கத்தினர்களாக, ஜீவனுள்ள கற்களாக இருக்கிறார்கள்.*

## *பயன்பாடு*

***ஒன்று கூட்டல் ஒன்று கூட்டுத் தொகை ... ஒன்று! (2:11-22)***

*இந்த உலகத்தில் நீடித்திருக்கும் நித்திய சமாதான உடன்படிக்கை - கடைசிவரை நீடித்திருக்கப் போவதுமான உடன்படிக்கை - தேவனால் ஏற்படுத்தப்பட்டு அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் முத்தரிக்கப்பட்டதுமான ஒன்று. இயேசு கொண்டுவரும் சமாதானத்தின் மகத்துவத்தைப் புகழ வேண்டுமானால், கிறிஸ்துவின் காலத்திலும் சபையின் துவக்கக் காலத்திலும் மனுஷர்களுக்குள் நிலவிய ஐக்கியமின்மையை நாம் நினைத்துப் பார்க்கிறோம். எபேசியர் 2 ம் அதிகாரத்தின் கடைசி பத்திகளில், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த இடைவெளியை அடைத்த தேவன் நமக்காக அவருடைய சபை, அதாவது சரீரம், விசுவாசிகளின் ஐக்கியப்பட்ட மாபெரும் கூட்டமாயிருக்கும்படி செயல்படுத்தினார் என்று பவுல் காட்டுகிறார்.*

*அந்நியமாக்கப்படல் (2:11, 12). ஒவ்வொரு கலாச்சாரத்திலும் ஜனக்கூட்டத்துக்கு இடையே பாகுபாடுகளை உண்டாக்கும் எல்லைக் கோடுகள் இருக்கவே செய்யும். பவுலின் நாட்களில், உலகம் இரண்டு பகுதிகளாக பிரிந்திருந்தது. யூதர்கள் புறஜாதிகள். இந்த இரண்டு கலாச்சாரங்களுக்கிடையே இருந்த பகைமை மிகைப்படுத்த இயலாதவை.*

*ஒரு யூதனுக்கும் ஒரு புறஜாதிக்குமிடையேயான வித்தியாசம் என்ன? யூதன் தான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுவின் வம்சாவளி என்று காட்டலாம். அப்படிச் சொல்லிக் கொள்ள வழியே இல்லாதவன் புறஜாதியான். பவுல் தனது நாட்களில் யூதர்களையும் புறஜாதிகளையும் அந்நியமாக்கின ஆறு வித்தியாசங்களை அடையாளப்படுத்துகிறார். புறஜாதிகள் ...*

*(1) விருத்தசேதனமில்லாதவர்கள் (2:11). புறஜாதிகள் விருத்தசேதனம் எனும் சடங்காச்சாரத்தைக் கைக் கொண்டிருக்க வில்லை. தேவன் யூதர்களுக்கு இந்த விசேஷித்த அடையாளத்தைக் கொடுத்து, உலகத்தை இந்த ஜனக்கூட்டத்தின் மூலமாக ஆசீர்வதிப்பதாகக் கூறின வாக்குத்தத்தத்தை தொடர்ந்து நினைப்பூட்டுதலாக அமைந்திருந்தது. இருப்பினும், யூதர்கள், அதை மாமிசப்பிரகாரமான மேட்டிமையாக மாற்றினர். முதல் நூற்றாண்டில் இந்த இகழ்ச்சி உச்சக் கட்டத்தை எட்டியது.*

*(2) கிறிஸ்துவைச் சாராதவர்கள் (2:12). யூதர்களுக்கு, ஒரு வரலாறாக ஒரு நோக்கத்தோடு முன்னேறியது. தேவன் தமது சித்தத்தை இஸ்ரவேல் தேசத்தின் வழியாக செயல்படுத்தினார். ஒரு நாளிலே தேவன் தமது கிறிஸ்துவை, தமது*

மேசியாவை, அனுப்பி புறஜாதிகளால் நசுக்கப்பட்டு வந்த யூதர்களை ஒட்டுமொத்தமாக விடுதலையளிக்க விருந்தார். வரவிருந்த கிறிஸ்துவிலே அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது, அது யூதர்களுக்கு ஆறுதலையும் தொடர் புறக்கணிப்பு மற்றும் உபத்திரவத்திற்கு மத்தியில் செயலுக்கத்தையும் கொடுத்தது.

ஆகிலும், புறஜாதிகள், அப்படியொரு கனவைக் கூட காண இயலாதநிலை. அவர்களுக்கு, வரலாறு என்று ஒன்றில்லாதிருந்தது. கிரேக்க தத்துவ ஞானிகள் வரலாற்றை திரும்பத் திரும்ப வரும் நிகழ்ச்சிகளாகக் குறிப்பிட்டனர். மூவாயிரம் ஆண்டுகளாக, வரலாறு தனது ஓட்டத்தை ஓடியது; பிறகு ஒரு பெரும் தீ பிளம்பு வந்து ரோம உலகத்தை அதன் தீ நாக்குகளால் பட்சித்துப் போட்டது.[22] முழு நடைமுறையையும் மறு செயல்படுத்தவே வரலாற்று அழிவு உண்டானது என்று சிலர் குறிப்பிட்டனர், ஒருவகையான ஜனங்களையும் நிகழ்வுகளும் திரும்பத் திரும்ப வருவதைக் காண முடியும் என்கிறார்கள். இதன் விளைவு வாழ்க்கை ஒரு வெறுமையும் அர்த்தமற்றதுமாகும் என்பது போல் காணுகின்றனர். புறஜாதிகள் தங்களுடைய பிரயோஜனமில்லாத வாழ்விலிருந்து தங்களை மீட்க ஒரு இரட்சகர் வரப்போவதில்லை என தங்களின் உலக கண்ணோட்டத்தில் பார்த்தனர்.

*(3)* அவர்களுக்கு குடியுரிமை இருக்கவில்லை *(2:12)*. தேவன் தமது ஜனங்களாயிருக்கும்படி இஸ்ரவேல் தேசத்தை அழைத்தார். அவரது அழைப்பினாலே தேவனுடைய ராஜ்யத்தில் அவர்களுக்கு தெய்வீக குடியுரிமை அளிக்கப்பட்டது. புறஜாதிகளுக்கு இப்படிப்பட்ட அழைப்பு கிடைத்திருக்கவில்லை. தேவனுடைய ராஜ்யத்தில் இருப்பது குறித்த எவ்வித கருத்தாலோசனையும் அவர்களுக்கு இருக்கவில்லை, அல்லது குடிமகன்களாய் இருக்கும்படி எந்த சந்தர்ப்பமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

முதல் நூற்றாண்டு வாக்கில், சில யூதமார்க்கத்தமைந்த புறஜாதிகளை ஏற்றுக் கொண்டனர்; ஆகிலும், இந்த மனமாற்றம் பெற்றவர்கள் அதிகப் பட்சமாக, இரண்டாந்தர குடிமக்களாக இருந்தனர். அவர்கள் எப்போதுமே, "உங்கள் தகப்பனாகிய ஆபிரகாம்" என்றே சொல்ல வேண்டியிருந்தது. அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இயல்பாக குடியுரிமை பெற்றவர்களல்ல என்பதாக தொடர்ந்து நினைவுறுத்தப்பட்டனர்.

*(4)* உடன்படிக்கையில்லாதவர்கள் *(2:12)*. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடும் - பின்னர் மோசேயோடும் கூட - தேவன் தமது ஜனங்களுடன் உடன்படிக்கை ரீதியில் உறவுமுறை கொண்டு தம்மை உட்படுத்தினார். புறஜாதி ஜனங்களிடம் அவர் ஒருபோதும் இப்படியொரு உடன் படிக்கையை ஏற்படுத்தவில்லை. முன்னுரைக்கப்பட்டு நிறைவேறின தெய்வீக வாக்குத்தத்தம் எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளையும் அனைத்து வாக்குத்தத்தங்களையும் தேவன் தமது தேர்வு செய்த இஸ்ரவேல் தேசத்தோடு மட்டுமே செய்தார். இவைகளில் புறஜாதிகள் உரிமை கொண்டாட எதுவுமே இருக்க வில்லை.

*(5)* அவர்கள் நம்பிக்கையற்றவர்களாயிருந்தனர் *(2:12)*. பழங்கால உலகில் மேகம் போன்ற நம்பிக்கையின்மை அமிழ்த்திக் கொண்டிருந்தது. தத்துவங்களெல்லாம் வெறுமையானவைகளாயிருந்தன; பாரம்பரியங்கள் எவரையும் திருப்திபடுத்தவில்லை; சமய வழிபாடுகள் தங்களின் வழிபாடுசெய்யும் மக்களுக்கு அவர்கள் சந்தித்த வாழ்விலோ சாவிலோ

*உதவிசெய்ய பெலனற்று இருந்தன. புறஜாதிகளுக்கு தேவனிடத்திலிருந்து எவ்வித செய்தியும் இல்லை, அவர்கள் கைவிடப்பட்ட நிலையில் அவர்களை விடுவிக்க எந்த கிறிஸ்துவும் இருக்கவில்லை, இரட்சிக்கப்பட்ட நம்பிக்கை எதுவுமிருக்கவில்லை. அவர்களுக்கென எதிர்காலத்தை எதிர்கொள்ள எவ்வித நம்பிக்கையும் இல்லாமலும், பரிபூரண வாழ்வைப் பெறும்படி ஊக்கப்படுத்தும் நம்பிக்கையில்லாமலும் இருந்ததில் வியப்பு எதுவுமிருக்கிறதா?*

*(6) சிருஷ்டிகர் இல்லை (2:12). ஏராளமான விக்கிரகங்களைக் கொண்டிருந்தனர் - இருந்தும் தேவனற்றிருந்தார்கள். புறஜாதிகள் தங்களின் சிருஷ்டிகரை அறிந்திருக்க வில்லை. அவர் யார், அவர் அவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது குறித்து எவ்வித கருத்துமில்லை. அவர்களால் ஆன சிறப்பான செயல் "அறியப்படாத தேவனுக்கென்று" ஒரு சிலையை உருவாக்கிடவும் அதினால் வேறெந்த தெய்வத்தையும் புண்படுத்தமாட்டார்கள் என்றும் நம்பினார்கள்.*

*இந்த ஆறு பிரதான வித்தியாசங்களும் யூதர்களையும் புறஜாதிகளையும் வெகு தொலைவில் பிரித்துவைத்தது. ஒப்புரவாக இயலாத வித்தியாசங்கள் இரண்டு கலாச்சாரங்களையும் ஒன்றோடொன்று அந்நியமாக்கியது.*

*அந்நியமாக்கப்படுவதும், நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களிடத்திலிருந்து ஆவியிலே பிரிந்தும் இருப்பது, ஒரு பொதுவான அனுபவமாக இன்று உலகில் காணப்படுகிறது. அது பாவத்தினால் உண்டான ஒரு ஆதிக்கமாய் மனுஷருடைய இருதயங்களில் கிரியை செய்கிறது.*

*பாவநிவர்த்தி (2:13-17). மனுஷனுடைய தோல்வி எங்கேயோ அங்கே தேவனுடைய வெற்றி நிச்சயம். மனிதவர்க்கத்துக்குள் ஏற்படுகிற எந்த வகை அந்நியமாக்கப்படுதலுக்கும் அவரிடத்தில் நிவாரணமுண்டு: "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (2:13). மனிதன் அந்நியமாக்கப்படுவதற்கு உள்ள நிவாரணம் கிறிஸ்துவே - அவன் தேவனிடத்திலிருந்து மட்டுமல்ல, மற்ற ஜனங்களிடத்திலிருந்தும்அந்நியமாக்கப்படுகிறான்.வன்மையானவித்தியாசங்களை கொண்டிருந்தவர்களை எடுத்து அவர் "ஒரே மனிதனாக" மறுபடியும் அவர்களுடைய உறவுமுறையில் வைக்கிறார்.*

*இயேசுவே நமது சமாதானக்காரணர் (2:14). இயேசு சமாதானத்தைக்* கொண்டுவந்தார் *என்று பவுல் சொல்லவில்லை; இயேசுவே நமது சமாதானமாக* இருக்கிறார் *என்று சொன்னார். அதன் பொருள் என்ன?*

*உதாரணமாக, அநேக ஆண்டுகளாக புயலின் நடுவே இருப்பது போன்ற ஒன்றிணைந்த வாழ்விற்குப் பின் ஒரு கணவனும் மனைவியும் விசாரணைக் கூடத்துக்குப் போய் விவாகரத்து கோருகிறார்கள். ஒரு வக்கீல் சம்பந்தப்பட்ட தாஸ்தாவேஜுகளை ஆயத்தப்படுத்தி புருஷனுக்கு இந்த சொத்தும் மனைவிக்கு அந்த சொத்தும் உரிமையாகிறது, புருஷன் குறிப்பிட்ட சலுகையைச் செய்வான் மனைவி வேறொரு சலுகையைச் செய்ய வேண்டுமென்றும் அந்தப் பதிவேடுகளில் சொல்லப்படுகிறது. அந்தப் பதி வேடு சட்டரீதியானது தான், ஆகிலும் அந்த மனுஷனும் ஸ்திரீயும் அந்தப் பகிவேடுகளில் எழுதப்பட்டவைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம்.*

*இதற்கு மாறாக, ஒருவேளை அவர்களுடைய பத்து வயது மகன் - இருவராலும் மிகவும் அன்பாய் நேசிக்கப்பட்டவன் - உள்ளே போய் அவர்கள்*

இரண்டு பேருடைய கைகளையும் பற்றிக் கொண்டு ஒன்றிணைக்கிறான். பிறகு, அழுகையோடு, அவன் சொல்லுகிறான், "தயவுசெய்து விவாகரத்துப் பெறாதீர்கள். ஒன்றாகக் கூடி வாழுங்கள். நீங்கள் எனக்கு வேண்டும். மீண்டும் நீங்கள் ஒருவருக்கொருவர் நேசிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். உதவி செய்ய என்னால் என்ன முடியுமோ அதை நான் செய்வேன்" என்கிறான். மகன் ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளை, பதிவேடுகள் ஒருபோதும் செய்ய முடியாத சிந்தனைகளை, நிச்சயமாக அவர்களுக்குள் கொடுப்பான். சட்ட ரீதியானவைகள் மனிதர்களின் இருதயங்களை மாற்றி விடாது.

மனிதனுடைய நிர்பந்தமான நிலைமைக்கு பரிகாரம் மனிதனாகிய, இயேசு என்று பவுல் சொன்னார். இயேசுவிடத்தில் நமக்குள்ள பொதுவான அன்பும் அவர் நமக்குள் இருப்பதும், ஒருவருக்கொருவர் நாம் காட்ட வேண்டிய அன்பே நமக்கு இயல்பான பொறுப்பாகிறது. நம்மில் ஒருவருக்கொருவர் சமாதானத்துக்கான ஊற்றக்காரணியாக அவர் வருகிறார்.

இயேசு சமாதானமளிக்கிறார் (2:15). மனித வர்க்கத்தினரிடையே போரிடும் வெறுப்புத் தன்மைக்கிடையில் இயேசு எப்படி சமாதானம் ஏற்படுத்தக் கூடும்? ஒரு புது மனித சுபாவத்தை உருவாக்குவதன் மூலம் அதைச் சொய்கிறார். "யூதக் கிறிஸ்தவன்" "புறஜாதிக் கிறிஸ்தவன்" எனும் பதங்கள் புதிய ஏற்பாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டது. கிறிஸ்துவுக்குள் இருப்பதெல்லாம் ஒரே வகையான தனிநபர்கள்தான் - ஒரு கிறிஸ்தவன்!

ஏற்கனவே குறைந்த பட்சம் பத்துத் தடவை எபேசியரில், "கிறிஸ்துவுக்குள்" (அல்லது அவருக்குள்), நமக்கு இருக்கிற நிலையை (ஸ்தானத்தை) பவுல் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஒரு யூதன் இரட்சிக்கப்பட்டால், அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். ஒரு புறஜாதி இரட்சிக்கப்பட்டால் அவனும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். கிறிஸ்துவுக்கு இருப்பது ஒரு சரீரம் மட்டுமே. சரீரத்தைக் குறித்த இரகசியம் இது தான். அநேக இனங்களுக்குள்ளே, அநேக கலாச்சாரங்களுக்குள்ளே, மற்றும் அநேக தேசத்தாருக்குள்ளிருந்து வருகிற யாவரும் ஒரே சரீரத்திற்குள் இருக்கிறார்கள் - அது இயேசு கிறிஸ்துவின் சரீரம்.

இயேசுவே நமக்குள் வாழும்போது அவர் நம்முடைய சமாதானக்காரணராகிறார். நாம் எல்லாரும் அவருக்குள் ஒன்றாயிருக்க வேண்டும் என்று உணரும்போது இயேசு சமாதானத்தை உண்டு பண்ணுகிறார்.

இயேசு சமாதானத்தை பிரசங்கிக்கிறார் (2:17). இயேசு பாவங்களுக்குக் கிடைக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து பிரசங்கிக்க வந்திருக்கலாம் - ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் சமாதானத்தின் செய்தியோடு, சமாதானப் பிரபுவாக வந்தார். கிறிஸ்து உங்களுடைய இருதயத்திலும் நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளும் இருந்தால், நீங்கள் ஒப்புரவாக்குதலின் செய்தியாளர் என்றழைக்கப்படுவீர்கள் - இந்த ஒப்புரவாகு தலை வீட்டில் உங்கள் துணைவரோடும், உங்கள் பிள்ளைகளோடும், வேலை செய்யுமிடத்தில் உங்கள் உடன் வேலையாட்களோடும், உங்கள் தெருவின் அந்தப்பக்கம் உள்ள உங்கள் அயலாருடன், உங்கள் நாட்டிற்கு அப்பால் உள்ள உங்கள் உறவினரோடும் உங்கள் ஊழியத்தைச் செய்வீர்கள்.

பகைமையின் நடுச்சுவரை நாம் தகர்க்க வேண்டும். ஏனெனில் நாம்

சமாதான பிரபுவுக்குள் இருக்கிறோம், நாம் மற்றவர்களுடன் அவருடைய சமாதானத்தை உண்டு பண்ணும் ஊழியத்தில் பங்குடைபவர்கள். கூடுமானால் எல்லா மனுஷருக்கும் சமாதானத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்கள்.

*இசைவு (2:18-22).* அந்நியமாக்கப்படுதல் பாவத்தின் விளைவாக ஜனங்களின் நடுவே இருக்கிறது. இயேசு மனுஷர்களுக்கிடையே ஒப்புரவாக்குதலினிமித்தம் பாவநிவாரணமாக தமது சரீரத்தைக் கொடுத்தார். கடைசி சத்தியமாக ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள ஒத்திசைவு பவுலின் கவனத்தைத் திருப்பியது.

பவுல் "பிரிவினைச் சுவராகிய பகைமையைக்" குறித்து பவுல் பேசினபோது, (2:14; NIV) அவர் எருசலேம் தேவாலயத்தின் அமைப்பை மனதில் கொண்டு அநேகமாகப் பேசியிருக்கலாம். தேவாலயத்து பிரகாரத்தினூடே சென்ற ஐந்து அடி உயரச் சுவரை நினைவுபடுத்தி எழுதியிருக்கலாம், அது யூதர்கள் மாத்திரம் செல்லக்கூடிய உள்பிரகாரத்தை புறஜாதிகளின் பிரகாரத்திலிருந்து பிரித்து யூதர்களின் நுழைவு வாசலுக்கருகில் இருந்தது. 1871 ல், இந்த பிரிவினைச் சுவற்றினூடே கிரேக்க எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த வாக்கியத்தை புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தனர், அதில், "அந்நியர்கள் தேவாலயத்து சுற்றுப்புற சுவரைத் தாண்டி நுழைய தைரியங்கொள்ளக் கூடாது. அப்படி யார் கண்டு பிடிக்கப்பட்டாலும் தன்னுடைய சொந்த மரணம் தொடர்ந்து வருவதைத் தானே தேடிக் கொள்கிறார்" என்று சொல்லப்பட்டுள்ளது.

அந்தச் சுவர் வெகு காலமாக இனங்களுக்கு நடுவே நிலவும் பகைமையை அடையாளப்படுத்தியது. ஆவிக்குரிய ரீதியில் பேசினால், இயேசு மரித்த போது அந்த சுவரைத் தகர்த்தெறிந்தார். இப்பொழுது இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் படைத்த தேவனிடத்தில் சேர சம உரிமை பெற்றவர்களாக அனைத்து ஜனத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது. "நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (2:18).

மேற்கொண்டு பவுல் மூன்று ஒத்திசைவுகளைக் கொண்டு விளக்கமளிக்கிறார். அங்கே ஒரே ஒரு தேசம் மட்டுமே இருக்கிறது (2:19), அது பரிசுத்த தேசம், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. அங்கே ஒரே ஒரு குடும்பம் மட்டும் (வீட்டார் மட்டும்) உண்டு (2:19); நாம் எத்தனை விதமான வித்தியாசங்களைக் கொண்டிருந்தாலும் தேவனுடைய வீட்டில் நாம் சகோதரர்களாக சகோதரிகளாக இருக்கிறோம். அங்கே ஒரே ஒரு ஆலயம் மட்டுமே உண்டு (2:21); அது மனிதனால் கட்டப்பட்டதல்ல, ஆனால் புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் அனைத்துவித பின்னணிகளுடன் ஜீவனுள்ள கற்களாய் ஊழியஞ்செய்கிறவர்களைக் கொண்டு இந்த ஆவிக்குரிய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.

சகல ஜனங்களையும் தமது குமாரன் மூலமாக தேவன் இசைவுள்ளவர்களாய்க் கொண்டு வந்துள்ளார். ஒருவருக்கொருவர் நாம் ஆவியின் ஐக்கியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசு நமது சமாதானக்காரணர் ஆதலால் மனுஷர்களுக்கிடையே நம் மூலமாக பூமியிலே சமாதானத்தைக் கொண்டு வர அவர் கிரியை செய்கிறார். கர்த்தருடைய சபையில் பிரிவினைச் சுவரை எழுப்புகிறவர்களுக்கு ஐயோ! மனுஷர்களுக்குள் இருக்கிற பிரிவுச்

*சுவர்களை தகர்த்தெறிவதே தேவனுடைய காரியமாயிருக்கிறது. சபையில் இருக்கும் இசைவான ஒற்றுமையை தங்கள் வார்த்தைகளினாலோ செயல் களினாலோ எவர் ஒருவர் குலைத்தாலும் அவர் தேவனுக்கு எதிராக யுத்தம் செய்கிறார்!*

*முடிவுரை.* நாம் சமாதானம் கூறும் செய்தியாளர்களாயிருந்து நமது சமாதான பிரபுவைப் பற்றிக் கொண்டு செயல்படுவது அவசியம். மற்றவர்களை நாம் பொருளாதார நிலைமை, இனம், அல்லது அந்தஸ்து ஆகிய இவைகளையெல்லாம் தாண்டி, சபைக்குள்ளே ஒரே புதிய மனிதனாய் இருப்பது என்றால் என்ன என்று உலகிற்கு காட்டும்படி கடந்து போவோமாக.

கிறிஸ் புல்லார்ட்

***சிலுவையின் மேல் - கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாகுதல் (2:13-22)***

*வசனம் 13ல் சொல்லப்பட்டுள்ள "இப்பொழுது" என்ற வார்த்தை வசனம் 4ன் "தேவனோ" என்பதுடன் தொடர்புடையது. சிலுவையின் இரத்தம் கிறிஸ்துவை நம்முடைய "சமாதானக் காரணராக்கியது." அவருடைய மரண பலியால் மனுஷனுக்கும் மனுஷனுக்குமிடையே சமாதானத்தை சாத்தியமாக்கியது, அது ஒருவருக்கொருவர் அந்நியமாக்கப்பட்டிருந்த ஜனங்கள் சபையாக "ஒரே புதிய மனிதனாக" ஒப்புரவாகுதலின் விளைவை உண்டாக்கியது. கிறிஸ்து கிறிஸ்தவர்களை "ஒரே சரீரமாக" தேவனுக்குள் ஒப்புரவாக்கிய காரியம் தேவனுக்கும் மனுஷனுக்குமிடையேயிருந்த சமாதானத்தை சாத்தியமாக்கியது. தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே ஒப்புரவாக்கிய காரியம் இன்று சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவோரை ஒருவருக்கொருவர் தேவனுடைய இராஜ்யத்தில் "உடன் பிரஜைகளாகவும்," "தேவனுடைய வீட்டில்" பிள்ளைகளாகவும், தேவன் வாசம் பண்ணுகிற "ஒரு பரிசுத்த ஆலயமாகவும்" ஆக்கியது.*

ஜெய் லோக்ஹார்ட்

---

குறிப்புகள்

[1]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 358. [2]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:294. [3]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 75. [4]Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah,* new updated ed. (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 169–70. [5]Josephus *Antiquities* 15.11.5. [6]Bullinger, 19. [7]Albert Barnes, *Notes on the New Testament: Ephesians, Philippians and Colossians,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1965), 47. [8]Wuest, 76. [9]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 544; see also Walter Bauer, A Greek- *English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press,

2000), 876. [10]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Galatians, to the Ephesians and to the Philippians* (Columbus, Ohio: Wartburg Press, 1946; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1961), 447. [11]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 149. [12]Wuest, 79. [13]Thayer, 439. [14]Bullinger, 58. [15]கலாத்தியர் 1:19; நடபடிகள் 14:14; 2 கொரிந்தியர் 11:13; வெளிப்படுத்தின விசேஷம் 2:2; எபிரெயர் 3:1. [16]Bullinger, 188. [17]Lincoln, 155. [18]Lenski, 454. [19]Lincoln, 157. [20]Lenski, 459. [21]Lincoln, 152. [22]The great conflagration in Rome began July 19, A.D. 64 and burned out of control for days. The fire eventually destroyed three of Rome's fourteen districts, doing extensive damage to seven more and leaving only four districts uninjured. It consumed private mansions, tenements, temples, shrines, altars, and irreplaceable treasures acquired through Roman conquest. (Tacitus Annals 15.40–41.)